# சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

**கணிதம் - தரம் 05 / இரண்டாந் தவணை – வாரம் 5**

**தயாரிப்பு – இரத்தினபுரி கல்வி வலயம், ஆரம்பபிரிவு / ஆசிரிய ஆலோசகர் வீ.ராஜகுமாரி**

- **நிறையை அளத்தல்** : <u>பொருளொன்றின் நிறையைக் கிட்டிய கிலோகிராமில் அனுமானித்து கூறவும், அளந்து பார்த்தும் ஒப்பிடுவார்.</u>
- பாடநூல் பக்கம் – 70 நிறைகளை நிறுப்பதற்குப் பயன்படும் தராசுகளை இனங்காண வழிப்படுத்துங்கள். ( தட்டுத்தராசு, விற்றரசு, சமையலறைத் தராசு, இரத்தினியல் தாரசு, நிலத்தராசு)
- முடியுமாயின் தட்டுத்தராசு ஒன்றையும் 1kg படிக்கல்லையும் பயன்படுத்தி சில பொருள்களை அனுமானித்து கூறவும், அளந்து பார்த்து கூறவும் வழிப்படுத்துங்கள்.
- படநூலிள்ள பக்கம் – 70, 71, 72, 73, 74 பயிற்சிகளைச் செய்து காட்ட வழிப்படுத்துங்கள்.

1). மனக்கணிதம் – வினாவி சரியான விடைகளைக் கூறுவதற்கு வழிப்படுத்துங்கள்.

i). ஒரு கிலோகிராமில் எத்தனை கிராம் உண்டு? .............................. g

ii). 2500 கிராமில் எத்தனை கிலோகிராமும் கிராமும் உண்டு? ............. kg ............ g

iii). ஒரு பப்பாசிப்பழத்தின் நிறை 1kg 450g , மற்றுமொரு பப்பாசிப்பழத்தின் நிறை 1kg 600g ஆகும். இரண்டு பப்பாசிப்பழங்களினதும் நிறை எவ்வளவு? ..............................

iv). 5kg 500g தேயிலைப் பைக்கற்றில் இருந்து 3kg 800g தேயிலை எடுக்கப்பட்டால் மீதி இருக்கும் தேயிலை எவ்வளவு? .............................

v). 50kg அரிசி இடக்கூடிய ஒரு சாக்குப்பையில் 30kg 500g நிறையுள்ள அரிசி இருக்கின்றது. அச்சாக்குப் பையை நிரப்புவதற்கு எவ்வளவு அரிசி தேவை? ...................

2). விடை எழுதுங்கள்.

| | உ+ம் | i) | ii) | iii) | iv) | v) |
|---|---|---|---|---|---|---|
| | kg g | kg g | kg g | kg g | kg g | kg g |
| | 1 450 | 25 950 | 1 475 | 3 800 | 45 620 | 54 900 |
| + | 1 600 | 45 450 | 4 250 | 4 220 | 4 380 | 5 100 |
| | 3 050 | | | | | |

| | i) | ii) | iii) | iv) | v) |
|---|---|---|---|---|---|
| | kg g | kg g | kg g | kg g | kg g |
| | 50 000 | 17 800 | 44 202 | 4 624 | 11 909 |
| - | 30 500 | 9 326 | 43 806 | 2 233 | 5 990 |
| | | | | | |

3). வசனங்களில் எழுதித் தீர்க்க வழிப்படுத்துங்கள்.

i). கமலினி கடைக்குச் சென்று 4kg அரிசியும், 2kg 800g சீனியும் வாங்கினாள். அவள் வாங்கிய சாமான்களின் மொத்த நிறை எவ்வளவு? ............................................

ii). குமாரின் மரக்கறி தோட்டத்திலிருந்து 6kg 700g போஞ்சியும், 7kg 870g கத்தரியும் பறிக்கப்பட்டது. தோட்டத்திலிருந்து பறித்த மரக்கறிகளின் நிறை எவ்வளவு? .................

iii). Aயின் நிறை 40kg 800g ஆகும். Bயின் நிறை 72kg 300g ஆகும். இருவரின் மொத்த நிறை யாது? ...........................................

iv). வைபவம் ஒன்றிற்காக கொண்டுவரப்பட்ட 10kg அரிசியில் 3kg 750g அரிசி எஞ்சியுள்ளது. பயன்படுத்திய அரிசியின் நிறை எவ்வளவு? ...........................

v). ஒரு வியாபாரி 5kg 360g உருளைகிழங்கில் 2kg 750g கிழங்கை விற்றார் எனின் எஞ்சிய கிழங்கின் நிறை எவ்வளவு? .................................